

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி, சிறுமுகை பேரூராட்சி, திம்மராயம்பாளையம் வீரமல்லம்மாள் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், காரமடை வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்எம்டி.கல்யாணசுந்தரம், பேரூராட்சித் தலைவர் மாலதி உதயகுமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஒன்றியம், பெரியாயிபாளையம், பழங்கரை பகுதிகளில், குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (CFSIDS) 2025 – 2026 கீழ் ரூபாய் 302 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டுமானப் பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மருத்துவர் கோகுல் கிருபா சங்கர், வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, ஒன்றிய செயலாளர்கள் ஈ.சிவப்பிரகாஷ், எஸ்.ஆர்.பழனிசாமி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மூலம் – கடந்த நான்கரை ஆண்டுகளில்

# ரூ.2,133.26 கோடி அரசு மானியத்துடன் ரூ.5490.80 கோடி கடன்!

### 66,018 புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்! - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பெருமிதம்!

சென்னை, ஆக.27-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை வாயிலாக கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.2,133.26 கோடி அரசு மானியத்துடன் ரூ.5490.80 கோடி கடன் வழங்கப்பட்டு 66,018 புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர் - என குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 26.08.2025 சென்னை, கிண்டி, சிட்கோ அலுவலக வளாகத்தில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்களுடன் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

குறு, சிறு மற்றும் நடுத்தர துறையின் மூலம் 6 வகையான சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் முதலீட்டு மானியம் உள்ளிட்ட 10 வகையான மானியத் திட்டங்கள், உலக முதலீட்டார் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து மாவட்டம் வாரியாக அமைச்சர் அவர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு இலக்கினை விரைவில் அடைய வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் மாற்றுதிறனாளிகள், மகளிர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினருக்கு அதிக எண்ணிக்கையில் கடன் வழங்க வேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தினார்.

கடந்த 2023-2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் புதியதாக தொடங்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டதின் கீழ் இதுவரை 2,970 பயனாளிகளுக்கு ரூ.324 கோடி மானியத்துடன் ரூ.581 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் இதுவரை 3,452 பயனாளிகளுக்கு ரூ.13.45 கோடி மானியத்துடன் ரூ.64.24 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு புதிய திட்டங்கள் மற்றும் ஏற்கனவே செயல் படுத்தப்பட்டு வரும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம், வேலை இல்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதம மந்திரி



யின் உணவு பதப்படுத்தும் குறுந்தொழில்கள் முறைபடுத்துதல் திட்டம் உள்ளிட்ட ஆறு வகையான சுய வேலை வாய்ப்பு திட்டங்களின் கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 66,018 பயனாளிகளுக்கு ரூ 5,490.80 கோடி கடன் வழங்கப்பட்டு அரசின் வாயிலாக ரூ 2,133.26 கோடி மாணியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் முதலீட்டு மானியம், மின் மானியம், ஊதிய பட்டியல் மானியம் உள்ளிட்ட 10 வகையான மானியத் திட்டங்களின் கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 20,702 MSME நிறுவனங்களுக்கு ரூ.1,459.28 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2024ம் ஆண்டு நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் MSME துறை சார்பில் ரூ.63,573.11 கோடி முதலீடு செய்யும் வகையில் 5,068 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 2,610 நிறுவனங்கள் ரூ.27,312.26 கோடி முதலீடு செய்து உற்பத்தியை தொடங்கியுள்ளன. இதன் மூலம் 1,02,061 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து திட்டங்களிலும் இலக்கினை எய்திடும் வகையில் துரிதமாக செயல்பட வேண்டும் என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட அனைத்து நிறுவனங்களும் உற்பத்தியை தொடங்கிட வழிவகை செய்திட வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் குறு,சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழக முதன்மை செயலாளர் ஆ.கார்த்திக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல் ராஜ் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆ.ராசா எம்.பி - வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - மேயர் ந.தினேஷ்குமார் வாழ்த்துரை!

# தி.மு.க. பொறியாளர் அணி மாநில - மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம்! திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

### எஸ்.கே.பி.கருணா தலைமை! துரை கி.சரவணன் முன்னிலை! எஸ்.ஏ.நந்தகுமார் வரவேற்புரை!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் வருகின்ற (31.08.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, கோவை அன்னூர், கோவை டு சித்தி என்.எச்.ரோடு, சாமுத்திரிகா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கழக பொறியாளர் அணி மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா தலைமை வகிக்கிறார்.

கழக பொறியாளர் அணி மாநிலத் தலைவர் துரை கி.சரவணன் முன்னிலை வகிக்கிறார்.

கழக பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் அம்பாள் எஸ்.ஏ.நந்தகுமார் வரவேற்புரை ஆற்றுகிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மேயர் ந.தினேஷ் குமார் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக பொறியாளர் அணி மாநில இணை மற்றும் துணைச் செயலாளர்கள் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., கு.சண்முகசுந்தரம், வே.உமாகாந்த், இரா.நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார், ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், கலை கார்த்திகேயன், வெற்றி ஞானசேகரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன் ஆகியோர் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றனர்.

கோவை மாநகர மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு நன்றி உரை ஆற்றுகிறார்.

### அரியலூர் மாவட்டத்தில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கு

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர்,ஆக.29-

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி, தூய மேரி தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து, மாணாக்கர்களுக்கு உணவினை வழங்கி, மாணாக்கர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 16.09.2022 அன்று அரியலூர் மாவட்டம், செங்குந்தபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, 25.08.2023 அன்று அரியலூர் மாவட்டத்தில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் ஊரக பகுதிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள 488 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் 23,904 மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர். மேலும், 15.07.2024 அன்று முதல் அரசு கிராம ஊராட்சிகளில் உள்ள அரசு உதவிப் பெறும் 37 பள்ளிகளில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு 2,675 மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்தொடர்ச்சியாக இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரி வாக்கத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து அரியலூர் நகராட்சி தூய மேரி தொடக்கப்பள்ளியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்து மாணாக்கர்களுக்கு உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

அந்தவகையில் அரியலூர் மாவட்டத்தில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள அரசு உதவிப்பெறும் 12 பள்ளிகளில் பயிலும் 2,627 மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 537 அரசு / அரசு உதவிப்பெறும் தொடக்கப் பள்ளி / நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் 29,206 மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வாயிலாக காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு பயன்பெறுகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் வாயிலாக பயன்பெறும் மாணவர் தருண் தெரிவிக்கையில் எனது பெயர் தருண். நான் பார்ப்பனச்சேரி கிராமத்தில் இருந்து வருகிறேன். நான் தூய மேரி தொடக்கப்பள்ளியில் படித்து வருகிறேன். எங்கள் பள்ளியில் இன்று எங்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் எங்களுக்கு கேசரி, பொங்கல் ஆகிய உணவுகள் வழங்கப்பட்டது. உணவு நன்றாக இருந்தது. பள்ளியில் காலையிலும் தினமும் எங்களுக்கு உணவு வழங்குவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இத்திட்டத்தினை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி என மாணவர் தருண் என்பவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் நகர்மன்றத் துணைத் தலைவர் கலியமூர்த்தி, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட நிலை அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றியப் பெருந்தலைவர் தயாளன் தலைமை!

# மரக்காணம் ஒன்றியம் - எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், ஆக. 29-

மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல் படுத்த ப்பட்டுள்ள “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கடந்த மாதம் 15 ஆம் தேதி சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார் இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.ஒன்றிய துணை சேர்மன் பழனி முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமைதொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்

அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்துதுறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முகாமில் மக்கள் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளான் இடுபொருட்களையும், மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை, நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை அடங்கிய பெட்டகத்தினையும் அவர் வழங்கினார்.

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயன்பெறுவதற்கு மனு அளித்தனர்.

நிகழ்ச்சியில் மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் திருநா வுக்கரசு, வேலாயுதம்,மகாலட்சுமி காளிதாஸ் நாகஜோதி கணேஷ், ஊராட்சி மன்ற தலைவர் ராஜாராம், துணைத் தலைவர்கள் ஜனார்த்தனன், லட்சுமி காந்தன்,மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தென்னங்குடிபாளையம் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆணையத்தை வழங்கினார். அப்போது ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் வே.செழியன், ரா.வரதராஜன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், நல்லம்மாள், சந்திரமோகன், சிவராமன், கருணாநிதி, நடராஜ், சிவாஜி, ராஜேந்திரன், குணசேகரன், வீராசாமி, சேட்டு, சசிகுமார், அன்பழகன், ரஜினி, மற்றும் 13 துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஏற்பாட்டில் (2024 2025) ஆம் கல்வியாண்டில் மாநில அளவில் நடைபெற்ற ஊரகத் திறனாய்வு தேர்வில் (TRUST EXAM) தேர்ச்சி பெற்ற 83 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு விழா தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன், தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சை மேயர் சண்.இராமநாதன், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.